Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 247 உள்ளூர் - 04.09.2026 வெள்ளிக்கிழமை விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com

Madurai Edition *Vol 55 * Issue 247 வெளியூர் - 05.09.2026 சனிக்கிழமை Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

புதன் பெயர்ச்சி! இந்த 5 ராசிகளுக்கு அதிர்ஷ்ட காலம்!

1,748 ஜூனியர் இன்ஜினியர் பணியிடங்கள்!

நேபாள வெள்ளம்: தொடரும் பலி!

இரண்டாக உடைந்தது சிஜேபி! உருவானது சிஜேபி-டி!

## கிருஷ்ண ஜெயந்தி: ஜனாதிபதி, பிரதமர், முதலமைச்சர் வாழ்த்து!

புதுடெல்லி, செப். 04–

கிருஷ்ண ஜெயந்தியையொட்டி ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

கிருஷ்ணரின் அவதாரம், மனித குலத்திற்கு வாழ்வியல் நெறிகளையும், அறம், கடமை, பக்தி ஆகியவற்றின் உயர்ந்த தத்துவங்களையும் உணர்த்துகிறது. இத்தகைய மகத்தான கீதோபதேசத்தை வழங்கிய கண்ணனின் பிறப்பைத் தான் பக்தர்கள் கிருஷ்ண ஜெயந்தி, கோகுலாஷ்டமி, கிருஷ்ண ஜென்மாஷ்டமி எனப் பல பெயர்களில் உலகெங்கும் கோலாகலமாகக் கொண்டாடுகின்றனர்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்,

ஸ்ரீ கிருஷ்ணரின் வாழ்க்கை வரலாறும் செய்திகளும் இந்தியக் கலாச்சாரத்திற்கும் தத்துவத்திற்கும் புத்துணர்வை அளிக்கின்றன. கிருஷ்ணர் சத்தியம், நேர்மை, நீதி, கருணை மற்றும் தன்னலமற்ற செயல் ஆகியவற்றின் பாதையைக் காட்டினார். ஸ்ரீ கிருஷ்ணரின் கொள்கைகளை அனைவரும் ஏற்றுக்கொண்டு, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வளர்ச்சி பெற்ற இந்தியாவை கட்டியெழுப்புவதற்காகத் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.








பிரதமர் மோடி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்,

உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த ஜென்மாஷ்டமி நல்வாழ்த்துகள். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தெய்வீகச் செய்திகளில் தன்னலமற்ற செயலுக்கான ஆழ்ந்த உத்வேகம் அடங்கியுள்ளது, அதுவே மனிதகுலத்தை தொடர்ந்து வழிநடத்தி வருகிறது. அவரது பக்திக்கும் வழிபாட்டிற்கும் அர்ப்பணிக்கப்பட்ட இந்த புனிதமான நன்னாள், அனைவரின் வாழ்விலும் நேர்மறை ஆற்றலையும் வலிமையையும் ஊட்ட வேண்டும் என்பதே எனது மனமார்ந்த விருப்பம். ஜெய் ஸ்ரீ கிருஷ்ணா! என்று தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் விஜய் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

அனைவரின் இல்லங்களும் உள்ளங்களும் மகிழ்ச்சியால் நிறையும் கிருஷ்ண ஜெயந்தி திருநாளில் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அநீதிக்கு எதிரான அறம் வெல்லும், எத்தகைய சூழலிலும் கடமை தவறாது செயல்பட வேண்டும், தர்மத்தின் வழியில் மன உறுதியுடனும் நம்பிக்கையுடனும் வாழ்க்கைப் பயணத்தை முன்னெடுக்க வேண்டும் என்னும் ஸ்ரீகிருஷ்ணரின் உபதேசங்களைப் பின்பற்றி உயரிய வாழ்வியல் நெறிகளுடன் அன்பும் அறமும் தழைத்தோங்கும் நல்லுலகைப் படைத்திடுவோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## குடியரசு துணைத் தலைவர் செப். 5-ல் சென்னை வருகை!

சென்னை, செப். 04–

குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், சென்னைக்கு சனிக்கிழமை (செப். 5) வருவதையொட்டி, கிண்டி, நுங்கம்பாக்கம் பகுதிகள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், சென்னைக்கு சனிக்கிழமை (செப். 5) வருவதையொட்டி, கிண்டி, நுங்கம்பாக்கம் பகுதிகள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், சென்னையில் செப். 5–ஆம் தேதி நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். முக்கியமாக கிண்டி நட்சத்திர



ஹோட்டல், நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் ஆகிய இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்றுப் பேசுகிறார்.

இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை சென்னை பெருநகர காவல் துறையினர் செய்து வருகின்றனர். மீனம்பாக்கம் விமான நிலையம், கிண்டி, நுங்கம்பாக்கம் ஆகிய பகுதிகளையும், சாலை மார்க்கமாக சி.பி.ராதாகிருஷ்ணன் செல்லும் பகுதிகளையும் சென்னை காவல் துறை செப்டம்பர் 5–ஆம் தேதி சிவப்பு மண்டலமாக அறிவித்துள்ளது.

இந்த நாளில் இப்பகுதிகளில் ட்ரோன்கள் ரிமோட் மூலம் இயக்கப்படும் மைக்ரோ லைட் ஏர்கிராஃப்ட், பாரா கிளைடர்ஸ், பாரா மோட்டார்ஸ், ஹேங் கிளைடர்ஸ், ஹாட் ஏர் பலூன்கள் ஆகியவை பறக்கத் தடை விதிக்கப்படுகிறது என சென்னை காவல் துறை எச்சரித்துள்ளது.

## சாலை விபத்தில் உயிரிழந்த மாணவிகளின் குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி: முதல்-அமைச்சர் விஜய் அறிவிப்பு!

சென்னை, செப். 04–

நாமக்கல் மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்த மாணவிகளின் குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல்–அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:– நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கொன்னையார் கிராமத்தில் நேற்று (03.09.2026) மாலை, கல்லூரியில் பயின்றுவரும் அதே கிராமத்தைச் சேர்ந்த சுபிதா (19 வயது) த/பெ. சேகர், என்ற மாணவி பள்ளியில் பயின்றுவரும் தனது சகோதரிகளான நிவேதா (17 வயது), தனுஸ்ரீ (13 வயது) மற்றும்




அபிநயா (12 வயது) த/பெ.ரமேஷ்பாபு ஆகியோரை அழைத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் வீட்டிற்குச் செல்லும்போது, தனியார் கல்லூரிப் பேருந்தில் மோதிய விபத்தில் நிவேதா, தனுஸ்ரீ மற்றும் அபிநயா ஆகியோர் சம்பவ இடத்திலேயும், சுபிதா என்பவர் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியிலும் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த நான்கு மாணவிகளின் பெற்றோர்களுக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வ தோடு, உயிரிழந்த மாணவிகளின் குடும்பத்தினருக்குத் தலா மூன்று லட்சம் ரூபாய் முதல்–அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேபாள வெள்ளம்: தொடரும் பலி!

நேபாளம், செப். 04–

நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி 1,290 ஆக உயர்ந்துள்ளது. இந்தியர்கள் 275 பேர் உள்பட 4,798–க்கும் மேற்பட்டோர் நிலை என்ன என்பது இதுவரை தெரியாத சூழலில், அவர்களைத் தேடும் பணி வெள்ளிக்கிழமை 10–ஆவது நாளாக தொடர்கிறது.

திபெத் – நேபாள எல்லையில் பெரும் பனிப்பாறைச் சரிவால் லெண்டே நதியில் கடந்த ஆகஸ்ட் 26 அன்று ஏற்பட்ட பெருவெள்ளம், நேபாளத்தின் போடே கோஷி நதியில் சீறிப்பாய்ந்தது. சகதியுடன் பல அடி உயரத்துக்கு



பெருக்கெடுத்த வெள்ளத்தில் கரையோர கிராமங்கள், சிறு நகரங்கள் அடியோடு அழிந்தன. வீடுகள், கட்டடங்கள், வாகனங்கள், பாலங்கள், சாலைகள், நீர்மின் நிலையங்கள், இதர உள்கட்டமைப்புகள் அடித்துச் செல்லப்பட்டன.

போடே கோஷி நதி வெள்ளம், திரிசூலி, நாராயணி நதிகளிலும் கலந்து பெரும் சேதத்தை விளைவித்தது. ரசுவா, நுவாகோட், சித்வன், நவல்பராசி கிழக்கு, நவல்பராசி மேற்கு, கோர்கா, தனாஹு ஆகிய மாவட்டங்களை புரட்டிப்போட்ட இந்தப் பெருவெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,290 ஆக உயர்ந்துள்ளது.

பெரும்பாலான உடல்கள் அடையாளம் காண முடியாத நிலையில் சிதைந்திருப்பதால், டிஎன்ஏ மாதிரிகளை சேகரித்த பின்னர், சர்வதேச விதிகளின்படி அரசே இறுதிச் சடங்குகளை நேபாள அரசே செய்து வருகின்றது.

## இஸ்ரோவின் மாபெரும் சாதனை!

# ‘விண்ணில் ஒரு கண்’! இந்திய விண்வெளிக்கு புதிய மைல்கல்!

## EOS–05 வெற்றிகரமாக ஏவல்!!

ஸ்ரீஹரிகோட்டா, செப். 04–

பூமியில் இருந்து சுமார் 36,000 கி.மீ. உயரத்தில் புவி – சுற்றுப்பாதையில் பயணித்து படமெடுக்கும் 2,367 கிலோ எடைகொண்ட இந்தியாவின் முதல் அதிக எடைகொண்ட EOS–05 செயற்கைக்கோளை ஜிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ இன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி வரலாற்றில் இடம்பிடித்தது.

ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சத்தீஸ்தவான் ஏவுகணைத் தளத்தில் இருந்து இன்று அதிகாலை 2.55 மணிக்கு செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது. நள்ளிரவு நேரம், மழை என சவால்கள் இருந்தபோதிலும் ஏராளமான பொதுமக்கள் குடைகளுடன் திரண்டு இந்த ஏவுதலை உற்சாகமாக கண்டு ரசித்தனர். செயற்கைக்கோள் ஏவப்பட்ட சுமார் 18 நிமிடங்களுக்குப் பிறகு திட்டமிட்டபடி துணை புவி ஒத்திசைவு சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. இது இந்த ஆண்டில் இஸ்ரோவின் முதல் வெற்றியாக அமைந்தது.

பூமியைக் கண்காணிக்கும் பல செயற்கைக்கோள்கள் குறைந்த புவி சுற்றுப்பாதையில் செயல்படும் நிலையில் EOS – 05 செயற்கைக்கோள் பூமியில் இருந்து 36,000 கி.மீ. உயரத்தில் உள்ள புவி ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்த செயற்கைக்கோள் பூமியின் சுழற்சி வேகத்துக்கு இணையாக செயல்படும். இதேபோல், இதுவரை விண்ணில் நிலைநிறுத்தப்பட்ட செயற்கைக்கோள்களிலேயே இதுதான் அதிக எடை கொண்டதாகும்.

விண்ணில் உள்ள கண் என்று வர்ணிக்கப்படும் இந்த செயற்கைக்கோள் நிகழ்நேர படங்களை வழங்குவதோடு, விவசாயம் மற்றும் பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட துறைகளில் நாட்டுக்கு உதவும்.




முந்தைய சில தோல்விகளுக்குப் பிறகு கிடைத்துள்ள இந்த வெற்றி குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள இஸ்ரோ தலைவர் வி. நாராயணன், “GSLV F–17 வாகனம், மேம்பட்ட EOS–05 புவி–படமெடுக்கும் செயற்கைக்கோளைத் திட்டமிடப்பட்டபடி சுற்றுப்பாதையில் வெற்றிகரமாகவும் துல்லியமாகவும் நிலைநிறுத்தியுள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 107–வது ஏவுதல் நிகழ்வு இது. அத்துடன் GSLV–யின் 19–வது பணி இதுவாகும்” என்று தெரிவித்தார்.

இதுகுறித்து பிரதமர் மோடி எக்ஸ்’ பக்கத்தில் பதிவிட்டுள்ள வாழ்த்து செய்தியில், “இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிநவீன புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான ‘இஓஎஸ்–05’–ஐ சுமந்தபடி ‘ஜிஎஸ்எல்வி–எஃப்17 ராக்கெட் வெள்ளிக்கிழமை (செப். 4) அதிகாலை 2.55 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது. இது இஸ்ரோவின் மற்றொரு சிறப்பான சாதனை மற்றும் நாட்டின் பெருமைக்குரிய தருணம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்களுடன் அமைச்சர்கள் பேச்சுவார்த்தை!

சென்னை, செப்.04–

சென்னையில் உழைப்பவர் உரிமை இயக்கம் சார்பில் பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும், கோரிக்கை மனுக்களை முதல்வர் நேரடியாகப் பெறுவதற்கு சந்திப்பு நேரம் ஒதுக்கக் கோரியும் தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 10 நாள்களுக்கும் மேலாக அவர்கள் மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் கட்டட கிழக்குப் பகுதி வாயிலில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

விசில் ஊதுதல், துடைப்பத்தால் தூய்மைப்படுத்துதல், மெழுகுவர்த்தி ஏந்துதல் போன்ற நூதன முறையில் போராட்டம் நடத்தி வந்த தூய்மைப் பணியாளர்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை கறுப்பு உடையில் வாயில் கறுப்புத் துணி கட்டியபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் சென்னை ரிப்பன் மாளிகையில் தூய்மைப் பணியாளர்களுடன் அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, என். ஆனந்த் நிர்மல்



குமார், ராஜ்மோகன் உள்ளிட்டோர் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

அமைச்சர்கள் பேசுகையில், “உங்கள் கோரிக்கைகள் எல்லாம் நியாயமானது தான். முந்தைய ஆட்சியில கஜானாவையே காலி செய்துவிட்டு போய்விட்டார்கள். ஆனால் எல்லாத்தையும் சரி செய்து முதல்வர் விஜய் உங்களுக்கு செய்து கொடுப்பார்.

நீங்கள் கஷ்டப்படுவதை பார்த்து முதல்வர் வருத்தப்பட்டார். நீங்கள் கவலைப்பட வேண்டாம். இது உங்கள் ஆட்சி. எப்போது வேண்டுமானால் எங்கள் அலுவலகத்திற்கு வாருங்கள். எங்கள் அலுவலக கதவுகள் உங்களுக்காக திறக்கப்பட்டு இருக்கும். இன்றைக்கு சென்னை தூய்மையாக இருக்கிறது என்றால் அதற்கு நீங்கள் தான் காரணம். நீங்கள் அனைவரும் உங்கள் குடும்பத்தினருடன் இருக்க வேண்டும், அதுதான் எங்கள் கோரிக்கை” என்று பேசியுள்ளனர்.

தலையங்கம் மதுரை மணி
வெள்ளிக்கிழமை 04.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 18-ம் தேதி

# ஒரே வாட்ஸ்அப்... பல கட்டணங்கள்!



ஒரே வாட்ஸ்அப்... பல கட்டணங்கள்! இனி அன்றாட பில்களை செலுத்துவதற்காக பல்வேறு செயலிகளைத் தேடி அலைய வேண்டிய நிலை குறையலாம்.

வாட்ஸ்அப் பயன்படுத்துவோருக்கு மெட்டா நிறுவனம் புதிய வசதியை அறிமுகம் செய்துள்ளது. இனி மின்சாரக் கட்டணம், சமையல் எரிவாயு உள்ளிட்ட அன்றாட அத்தியாவசியக் கட்டணங்களை வாட்ஸ்அப் செயலியில் இருந்தே நேரடியாக செலுத்தும் வசதி வழங்கப்பட்டுள்ளது.

NPCI–யின் பாரத் பில் பேமெண்ட் சிஸ்டம் (BBPS) உடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள இந்த வசதி மூலம், வெவ்வேறு செயலிகளுக்குச் செல்லாமல் வாட்ஸ்அப் பேமெண்ட்ஸ் வழியாக கட்டணங்களை செலுத்த முடியும்.

**என்னென்ன கட்டணங்களை செலுத்தலாம்?**

மின்சாரக் கட்டணம், கேஸ் சிலிண்டர் முன்பதிவு மற்றும் கட்டணம், குடிநீர் வரி, FASTag ரீசார்ஜ், ஆயுள் மற்றும் வாகன காப்பீட்டு பிரீமியம், கிரெடிட் கார்டு நிலுவை, வங்கிக் கடன் தவணை உள்ளிட்ட சுமார் 30 முக்கியப் பிரிவுகளில் கட்டணம் செலுத்தலாம்.

இதற்காக மொத்தம் 22,722 சேவை வழங்குநர்கள் இந்த வசதியில் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


**கூகுள் பே, ஃபோன்பேவுக்கு நேரடி போட்டியா?**

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை துறையில் ஏற்கெனவே ஆதிக்கம் செலுத்தும் கூகுள் பே, ஃபோன்பே, பேடிஎம் போன்ற செயலிகளுக்கு போட்டியாக, வாட்ஸ்அப்பை ஒரே தளத்தில் பல்வேறு சேவைகளை வழங்கும் செயலியாக மாற்றும் நோக்கில் மெட்டா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஒரே வாட்ஸ்அப்... பல கட்டணங்கள்! இனி அன்றாட பில்களை செலுத்துவதற்காக பல்வேறு செயலிகளைத் தேடி அலைய வேண்டிய நிலை குறையலாம்.




மதுரை வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை சார்பில் சிம்மக்கலில் செயல்படும் மாநகராட்சி முதியோர் இல்லத்திற்கு மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது. அறக்கட்டளை நிறுவனர் மணிகண்டன் கூறுகையில், இங்குள்ள முதியோர்களுக்கு உணவு தயாரிக்க மளிகை பொருட்கள் தேவைப்படுவதாக கோரிக்கை வந்தது. இதனையடுத்து ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்களை வாங்கி வழங்கினேன் என்றார். முதியோர்களும், இல்ல பொறுப்பாளரும் மணிகண்டனுக்கு நன்றி தெரிவித்தனர்.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் டெக்ஸ்–ராம்ப்ஸ் (Tex–Ramps scheme) திட்டத்தின் கீழ் ஜவுளித்துறை மாற்றங்களை முன்னெடுப்பதற்காக மாவட்ட பணிக்குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன் தலைமையில் நடைபெற்றது.



தேனி மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக குற்றம் தடுத்தல் மற்றும் பெண்கள் சேவை மையம் குறித்து மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில் மாவட்ட போலீஸ் அதிகாரிகள், பெண்களுக்கு எதிரான குற்றதடுப்பு பிரிவு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# முதல்-அமைச்சர் விஜய் ஸ்டைலில் விநாயகர் சிலை?

சென்னை, செப். 04–

விநாயகர் சதுர்த்தி விழா வருகிற 14–ந்தேதி கொண்டாடப்பட இருக்கிறது. இதையொட்டி ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து பலவிதமான வடிவமைப்புகளுடன் விநாயகர் சிலைகள் தமிழகத்திற்கு வரத்தொடங்கியுள்ளன.



இந்தநிலையில், முதல்–அமைச்சர் விஜய் ஸ்டைலில் விநாயகர் சிலைகள் வடிவமைக்கப்பட்டு உள்ளதை போன்ற படங்கள் சமூக வலைத்தளங்களில் கலக்கி வருகின்றன.

சமீபத்தில் சட்டசபையில் முதல்–அமைச்சர் விஜய் செய்த சைகை வைரல் ஆனது.

விஜய் சைகை காட்சியை தத்ரூபமாக விநாயகர் வடிவில் வடி வமைப்பட்டுள்ளதை போன்ற படங்கள், வீடியோக்கள் தான் தற்போது சமூக வலைத்தளத்தில் வைரல் ஆகி வருகின்றன. இது உண்மையான சிலையா அல்லது ஏ.ஐ. தொழில்நுட்ப படமா என்பது உறுதியாகவில்லை.

# சுங்கச்சாவடிகளே மோசடி! அதில் இப்படி ஒரு மோசடியா? 100 சுங்கச்சாவடிகள் சிக்கின!

நாடு முழுவதும் போலி செயலிகளைக் கொண்டு மக்களிடம் கட்டணக் கொள்ளையில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சுங்க சாவடிகளைக் கண்டறிந்திருப்பதாக அமலாக்கத் துறை அறிவித்துள்ளது.




பாஸ்டேக் இல்லாமல் வரும் வாகனங்களிடமிருந்து கட்டணத்தை வசூலிக்க போலியான செயலிகள் பயன்படுத்தப்பட்டிருப்பதும், இந்த கும்பல், பணத்தை மோசடி செய்து, போலி ரசீதுகள் கொடுத்து, நெடுஞ்சாலைத் துறைக்கு பெரிய அளவில் வருவாய் இழப்பை ஏற்படுத்தியிருப்பதாக விசாரணையில் கூறப்பட்டுள்ளது.

பாஸ்டேக் ஸ்டிக்கர்கள் இல்லாத வாகனங்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான சட்டவிரோத சுங்கக் கட்டணத்தை வசூலிக்க, 'அங்கீகரிக்கப்படாத' இரண்டு செயலிகளைப் பயன்படுத்தியதாக அமலாக்கத் துறை வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள சுமார் 100 நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகள், அதாவது, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் இயக்கப்படுபவைதான், இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

அமலாக்கத் துறை விசாரணையைத் தொடர்ந்து செப்டம்பர் 2ஆம் தேதி நாட்டின் பல மாநிலங்களில் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஜம்மு–காஷ்மீர், மேற்கு வங்கம் மற்றும் தில்லி–என்சிஆர் உள்ளிட்டப் பகுதிகளில் 14 இடங்களில் அதிரடி சோதனை நடத்தப்பட்டு பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதுவரை ரூ. 1 கோடி ரொக்கம், பல வங்கிக் கணக்குகளின் புத்தகங்கள், வங்கி ஆவணங்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டதோடு, எட்டு வங்கிக் கணக்குகள் முடக்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மோப்டேட்டா மற்றும் எனி என்று இரண்டு செயலிகளை மோசடி கும்பல் தயாரித்து, அதன் மூலம் பாஸ்டேக் ஸ்டிக்கர் இல்லாதவர்களிடமிருந்து சட்டவிரோதமாக கட்டணத்தைப் பெற்றுள்ளனர்.


முக்கிய குற்றவாளி கைது செய்யப்பட்டபோதுதான், அவரது இந்த செயலி மூலம் நாட்டில் உள்ள 100க்கும் மேற்பட்ட சுங்கச் சாவடிகளில் முறைகேடு நடந்து கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடியில் மிகப்பெரிய கும்பல் ஈடுபடிருக்கலாம் என்றும், இந்த செயலிகள், தேசிய நெடுஞ்சாலைத் துறை இணையதளத்துடன் இணைக்கப்பட்டு போலி ரசீதுகளும் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# சனி கிரகத்தின் தென் துருவத்தில் 10 பக்கங்களை கொண்ட அலை வடிவம் கண்டுபிடிப்பு!

வாஷிங்டன், செப். 04–

நமது சூரியனை சுற்றி வரும் கிரகங்களில் 6–வதாக இருப்பது சனி(Saturn). இது சூரியனில் இருந்து சுமார் 142 கோடி கி.மீ. தூரத்தில் உள்ளது. சனி கிரகத்தின் தனிச்சிறப்பு அதன் அழகான வளையம். சூரிய குடும்பத்தில் உள்ள பிற கிரகங்களில் காணப்படாத ஒரு தட்டையான வளையம் சனி கிரகத்தின் நடுப்பகுதியை சுற்றி உள்ளது.



நமது பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வர 365 நாட்கள் எடுத்துக் கொள்கிறது. அதனை நாம் ஒரு வருடமாக கணக்கில் கொள்வது போல், சனி கிரகம் ஒரு முறை சூரியனை சுற்றிவர 29 வருடங்கள் எடுத்துக் கொள்கிறது. பூமி தன்னைத்தானே சுற்றிவர 24 மணி நேரம் எடுத்துக் கொள்கிறது. அதே சமயம், சனி கிரகம் தன்னைத்தானே சுற்றிவர 10 மணி நேரம் மட்டுமே எடுத்துக் கொள்கிறது.

சூரிய குடும்பத்தில் வியாழன்(Jupiter) கிரகத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய கிரகமான சனி கிரகத்திற்குள், சரியாக 763 பூமிகளை அடக்கி விடலாம். இருப்பினும் சனியின் எடை, பூமியின் எடையை விட 95 மடங்குதான் அதிகம். சனி ஒரு வாயுக்கோளம். அதில் கடினமான உட்பகுதி மிகச்சிறியது. அதன் காற்று மண்டலத்தில் அமோனியா உறைந்து மேகக்கூட்டங்களாக இருப்பதால், கோளின் மேற்பரப்பு முழுவதும் பனிப்பிரதேசமாகவே காணப்படுகிறது.

1980–களில் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாசா' அனுப்பிய 'வாயேஜர்–1' மற்றும் 'வாயேஜர்–2' விண்கலங்கள் சனி கிரகத்தை புகைப்படம் எடுத்து பூமிக்கு அனுப்பின. அந்த புகைப்படங்களில், சனி கிரகத்தின் வட துருவத்தில் 6 பக்கங்களைக் கொண்ட(Hexagon) அலை வடிவம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நிலையில், சமீபத்தில் ஹப்பிள் தொலைநோக்கி மூலம் சனி கிரகத்தை படம்பிடித்ததில், வட துருவத்தைப் போலவே சனி கிரகத்தின் தென் துருவத்திலும் அலை வடிவம் ஒன்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது 10 பக்கங்களைக் கொண்ட(Decagon) அலை வடிவமாக உள்ளது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த அலை வடிவம் சனி கிரகத்தின் வளிமண்டலத்தில் காணப்படுகிறது.

சனி கிரகத்தின் வட துருவத்தில் உள்ள அலை வடிவத்தை விட, தென் துருவத்தில் இருக்கும் அலை வடிவம் மிகப் பெரியதாகவும், நிலையானதாகவும் இருக்கிறது. 10 பக்கங்களைக் கொண்ட இந்த அலை வடிவத்தின் ஒரு பக்க நீளம் மட்டும் சுமார் 16,700 கி.மீ. வரை உள்ளது என தெரியவந்துள்ளது. இந்த வடிவம் 2017 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் உருவாகி இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அந்த காலகட்டத்தில் சனி கிரகத்தின் தென் துருவம் பூமியின் பார்வைக்கு எதிர்புறமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



லட்சிய ஜனநாயக கட்சியின் திருப்பூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி செயலாளராக புதிதாக பொறுப்பேற்ற திருமதி தயா சாந்தி அவர்கள் தனக்கு பணியாற்ற வாய்ப்பினை வழங்கிய நிறுவன தலைவர் திரு ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் எம் எல் ஏ மற்றும் பரிந்துரை செய்த மாநில பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் இரா செந்தில் வாண்டையார் ஆகியோருக்கு சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் நேரில் சென்று பொன்னாடை போற்றி நன்றி தெரிவித்தார்.

# தங்கம் விலை மேலும் உயர்வு..!



சென்னை, செப். 04–

தங்கம் விலை மேலும் உயர்ந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.960 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,14,880–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.120 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.14,360–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையில் இன்று மாற்றமில்லை. வெள்ளி ஒரு கிராம் ரூ.255–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 55 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# குடமுழுக்கு விழாவில் பங்கேற்க புதுச்சேரி வரும் நித்யானந்தா?



புதுச்சேரி, செப். 04–

புதுச்சேரி, ஏம்பலத்தில், கைலாசா நித்யானந்தா தியான பீடத்திற்கு குடமுழுக்கு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, தியான பீட நிர்வாகிகள், புதுச்சேரி சட்டசபையில், முதல்–மந்திரி ரங்கசாமியை நேற்று சந்தித்து பேசினர்.

தியான பீட குடமுழுக்கு விழாவில் பங்கேற்க, புதுச்சேரிக்கு நித்யானந்தா வருகை தர உள்ளதாக, நிர்வா கிகள் தெரிவித்தனர். இதுதொடர்பாக, மத்திய அரசிடம் பேசி வருவ தாகவும், நித்யானந்தா புதுச்சேரி வரும்போது, மாநில அரசு பாதுகாப்பு தர வேண்டும் என்றும், முதல்–மந்திரியிடம் கோரிக்கை வைத்தனர். இதைக் கேட்ட ரங்கசாமி, 'அவர் வரட்டும் பார்த்துக் கொள்ளலாம்' என்று தெரிவித்தார். அவருக்கு, கைலாசா சிறப்புகள் அடங்கிய புத்தகத்தை தியான பீட நிர்வாகிகள் வழங்கினர்.

பல்வேறு வழக்குகளில் சிக்கி, போலீசாரால் தேடப்பட்டு வந்த நித்யானந்தா, 2020–ல், 'கைலாசா' என்ற தனி நாட்டை உருவாக்கியதாக அறிவித்தார். இந்த நிலையில் அவர் புதுச்சேரிக்கு வருகை தர இருப்பதாக, தியான பீட நிர்வாகிகள் தெரிவித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# புதன் பெயர்ச்சி! இந்த 5 ராசிகளுக்கு அதிர்ஷ்ட காலம்!



வேத ஜோதிடத்தின்படி, அறிவு, புத்திக்கூர்மை, பேச்சுத்திறன் மற்றும் தொழில் திறன்களுக்கு காரணமான புதன் பகவான், செப்டம்பர் 7–ஆம் தேதி சிம்ம ராசியிலிருந்து தனது சொந்த ராசியான கன்னி ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார்.

கன்னியில் ஆட்சி பலத்துடன் சஞ்சரிக்கும் புதனால், குறிப்பிட்ட சில ராசியினருக்கு வேலை, தொழில், வருமானம், குடும்பம் மற்றும் புதிய முயற்சிகளில் சாதகமான மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக ஜோதிடக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

**ரிஷபம்**

புதன் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் பிள்ளைகள் மூலம் சுபச் செய்திகள் கிடைக்கலாம். கல்வி மற்றும் வணிகத்தில் நல்ல பலன்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரித்து, நிதி ஆதாயமும் வலுப்பெறலாம்.

**சிம்மம்**

தனஸ்தானத்தில் புதன் சஞ்சரிப்பதால் வருமானம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த பணிகள் நிறைவு பெறலாம். உங்களுக்கு வர வேண்டிய பணமும் கிடைக்கக்கூடும்.

**மகரம்**

பாக்கிய ஸ்தானத்தில் புதன் சஞ்சரிப்பதால் குடும்ப மகிழ்ச்சி, ஆளுமைத் திறன் மற்றும் தொழில் முன்னேற்றம் அதிகரிக்கலாம். புதிய முதலீடுகள் எதிர்காலத்தில் நல்ல பலனைத் தரக்கூடும்.

**கும்பம்**

புதிய திட்டங்கள் வெற்றிக்கு வழிவகுக்கலாம். வியாபாரம் மற்றும் தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. குடும்பப் பிரச்சினைகளை புத்திசாலித்தனமாக சமாளிக்க முடியும். வீடு, நிலம் அல்லது வாகனம் வாங்கும் முயற்சிகளும் சாதகமாக அமையலாம்.

குறிப்பு: இது ஜோதிடக் கணிப்புகளை அடிப்படையாகக் கொண்ட தகவல் மட்டுமே; இதனை உறுதியான எதிர்காலக் கணிப்பாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

# தமிழகத்தில் காற்றாலை மின் உற்பத்தி 1,045 கோடி யூனிட் ஆக உயர்வு!



சென்னை, செப். 04–

தமிழ்நாட்டில் உள்ள காற்றாலை மின் நிலையங்களில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை, 1,044.67 கோடி யூனிட் மின்சாரம் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் குஜராத்துக்கு அடுத்தப்படியாக தமிழ்நாடு அதிக காற்றாலை மின் கட்டமைப்பை கொண்டுள்ளது. தமிழகத்தில் தனியார் நிறுவனங்கள் தற்போதைய நிலவரப்படி, 9,527 மெகா வாட் திறனில், காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை அமைத்து உள்ளன.

மே மாதம் முதல் செப்டம்பர் வரை காற்றாலை சீசன். இருப்பினும், ஏப்ரல் முதலே காற்றாலைகளில் மின்சாரம் கிடைக்கிறது. இந்த சீசனில் காற்றின் வேகம் அதிகம் இருந்ததால், காற்றாலை மின் நிலையங்களில் இருந்து தினமும் சராசரியாக, 8 கோடி யூனிட் மின்சாரம் கிடைத்தது.

இதன்படி இந்தாண்டு ஏப்ரல் 1ம் தேடி முதல் ஆகஸ்ட் 31ம் தேதி வரை, 1,044.67 கோடி யூனிட் மின்சாரம் கிடைத்துள்ளது. இது முந்தைய ஆண்டின் இதே காலத்தில் 1,011.20 கோடி யூனிட்டாக இருந்தது. இந்த ஆண்டில் 33 கோடி யூனிட் கூடுதலாக கிடைத்துள்ளது.

வரும் நாட்களில் காற்றின் வேகம் மேலும் அதிகரித்தால், காற்றாலை மின் உற்பத்தி மிக அதிக அளவை எட்டும் என தகவல் வெளியாகி உள்ளது.

# பொது அறிவிப்பு

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், மேட்டுத்தெரு, தர்மராஜபுரம், வருசநாடு என்ற முகவரியில் குடியிருந்து வரும் செல்வம் அவர்களின் மனைவி பஞ்சம்மாள் ஆகிய நான் இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளும் பொது அறிவிப்பு என்னவென்றால்,

எனது தந்தை சுருளி த/பெ முத்து என்பவர் கடந்த 07.02.1998–ம் தேதி தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், மேட்டுத்தெரு, தர்மராஜபுரம், வருசநாடு என்ற முகவரியில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை அரசு உரிய பிறப்பு/இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடக்கோரி பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு தாக்கல் செய்து அம்மனுவும் ந.க.எண்: 3170/2026/அ7 என்ற எண்ணாகி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த விளம்பரம் வெளியான 15 நாட்களுக்குள் சமூகம் பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் முன்பாக நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களின் ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் ஷை மனுவில் பேரில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன்மூலம் சகலருக்கும் தெரிவிக்கலாயிற்று.

**திருமதி. பஞ்சம்மாள்,**
க/பெ. செல்வம்,
மேட்டுத்தெரு, வருசநாடு, தர்மராஜபுரம்,
மயிலாடும்பாறை கிராமம், ஆண்டிபட்டி வட்டம்,
தேனி மாவட்டம்.




# தலைவலி வந்ததும் மாத்திரையா? ஒரு கிளாஸ் தண்ணீர் போதுமா?



தலைவலி ஏற்பட்டவுடன் உடனடியாக மாத்திரை எடுத்துக்கொள்வது பலரின் வழக்கம். ஆனால், உடலில் நீர்ச்சத்து குறைபாடு அல்லது எலக்ட்ரோலைட் சமநிலையில் ஏற்படும் மாற்றமும் தலைவலிக்கு காரணமாக இருக்கலாம் என ஊட்டச்சத்து நிபுணர் ஸ்வேதா ஷா தெரிவித்துள்ளார்.

அவர் பரிந்துரைத்துள்ள எளிய முறையில், சிறிதளவு உப்பை நாக்கில் வைத்து பின்னர் ஒரு கிளாஸ் தண்ணீர் குடிக்கலாம். நீர்ச்சத்து குறைந்திருந்தால் தண்ணீர் திரவச்சத்தை மீட்டெடுக்க உதவுவதுடன், உப்பில் உள்ள சோடியம் எலக்ட்ரோலைட் சமநிலைக்கு பங்களிக்கலாம்.

ஆனால், அனைத்து தலைவலிக்கும் உப்புதண்ணீர் தீர்வாகாது. தூக்கமின்மை, மன அழுத்தம், உணவு தவிர்ப்பது, கண்களுக்கு அதிக அழுத்தம், ஒற்றைத் தலைவலி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தலைவலி ஏற்படலாம்.

அதிகப்படியான வியர்வை, வாந்தி அல்லது வயிற்றுப்போக்கு காரணமாக நீர்ச்சத்து மற்றும் எலக்ட்ரோலைட்டுகள் குறைந்திருந்தால், திரவங்களுடன் தேவையான எலக்ட்ரோலைட்டுகளையும் ஈடுசெய்வது முக்கியமாக இருக்கலாம்.

**ஆனால் ஒரு முக்கிய எச்சரிக்கை!**

ஒரு சிட்டிகை உப்பை எடுத்துக்கொண்டால் 5 நிமிடங்களில் தலைவலி குணமாகும் அல்லது ஒற்றைத் தலைவலியை ஏற்படுத்தும் மூளை சமிக்ஞைகள் தடுக்கப்படும் என்பதற்கு நம்பகமான அறிவியல் ஆதாரம் இல்லை.


மேலும், உயர் ரத்த அழுத்தம், இதயம் அல்லது சிறுநீரகம் தொடர்பான சில பிரச்சினைகள் உள்ளவர்கள் கூடுதல் சோடியம் எடுத்துக்கொள்வதில் கவனமாக இருக்க வேண்டும். மருத்துவ ஆலோசனையின்றி கூடுதல் உப்பை உட்கொள்வதைத் தவிர்ப்பது நல்லது.

தொடர்ந்து அல்லது அடிக்கடி தலைவலி ஏற்பட்டால், காரணத்தை கண்டறிந்து மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

# FCRA மசோதாவை ஆய்வு செய்ய 31 எம்.பி.க்கள் கொண்ட கூட்டுக்குழு அமைப்பு.. பின்னணி என்ன?

புதுடெல்லி, செப். 04–

எப்சிஆர்ஏ சட்டத்திருத்த மசோதாவை ஆய்வு செய்ய 31 பேர் கொண்ட நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.




அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகளை கண்காணித்து ஒழுங்குபடுத்தும், வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டத்திருத்த மசோதா (எப்சிஆர்ஏ)வுக்கு எதிர்க்கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

மத்தியில் பாஜக தலைமையிலான என்டிஏ அரசாங்கம் எப்சிஆர்ஏ மசோதாவை கடந்த நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் கொண்டு வர எத்தனித்தது. ஆனால் ஆகஸ்ட் 12 அன்றுமக்களவையில்எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பு மற்றும் விவாதங்களுக்குப் பிறகு மசோதாவானது நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு அனுப்பி ஆய்வு செய்ய முடிவெடுக்கப்பட்டது.

இந்நிலையில் எப்சிஆர்ஏ மசோதாவை ஆய்வு செய்ய 31 எம்.பிக்களை உள்ளடக்கிய நாடாளுமன்ற கூட்டுக் குழுவை மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அமைத்துள்ளார். இந்த கூட்டுக்குழுவில் பாஜக எம்பி சஞ்சய் ஜெய்ஸ்வால் தலைமை வகிப்பார்.

இதில் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரசை சேரந்த 5 எம்.பிக்கள் இடம்பெற்றுள்ளனர். திமுகவின் 2 எம்பிக்கள் இடம்பெற்றுள்ளனர்.

சமாஜ்வாதி, சரத்பவார் தேசியவாத காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உள்ளிட்ட கட்சிகளின் தலா 1 எம்.பி.க்கள் குழுவில் இடம்பெற்றுள்ளனர். மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் எம்.பிக்கள் இருவர் இடம்பெற்றுள்ளனர்.

2014 முதல் பல சர்ச்சைக்குரிய மசோதாக்களை மத்திய பாஜக அரசு கொண்டுவந்துள்ளது. அவ்வாறான மசோதாக்களை ஆய்வு செய்ய அமைக்கப்படும் 19வது நாடாளுமன்ற கூட்டுக் குழு இது. 2024இல் இருந்து 9வது கூட்டுக்குழு இது.

கடந்த 1976 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில் எப்சிஆர்ஏ சட்டம் கொண்டு வரப்பட்டது.

கடந்த 2010 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் ஆட்சியில் இந்த சட்டத்தில் கடுமையான விதிகள் சேர்க்கப்பட்டன.

கடந்த 2020 ஆம் ஆண்டில் பிரதமர் திர மோடி தலைமையிலான என்டிஏ அரசின் இரண்டாம் ஆட்சிக் காலத்தில் எப்சிஆர்ஏவில் மேலும் கடுமையான விதிகள் சேர்க்கப்பட்டன.

தற்போது மேலும் அதில் மேலும் 3 முக்கிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. எப்சிஆர்ஏ உரிமம் ரத்து செய்யப்பட்ட அமைப்புகளின் சொத்துக்களை நிர்வகிக்கவும், தேவைப்பட்டால் அவற்றை விற்கவும் ஒரு தனி அதிகாரியை அரசு நியமிப்பது,

உரி மம் ரத்து செய்யப்பட்ட அமைப்புகள் தங்களின் வெளிநாட்டு நிதி மற்றும் அசையும், அசையா சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு கடு மையான கட்டுப்பாடுகளை விதிப்பது,குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் விதிகளைப் பூர்த்தி செய்யாத அமைப்புகளின் சொத்துக்களை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டில் எடுப்பது ஆகியவை புதிய திருத்தங்கள் ஆகும்.

இது குறித்து புதிதாக அமைக்கப்பட்ட கூட்டுக்குழு செய்து தனது பரிந்துரைகளை சமர்ப்பிக்க உள்ளது. இதன் பின் மசோதா அடுத்த கூட்டத்தொடரில் மக்களவையில் வாக்கெடுப்புக்கு விடப்படும்.

# வேலை வாய்ப்பு

## 1,748 ஜூனியர் இன்ஜினியர் பணியிடங்கள்!



மத்திய அரசுப் பணியில் சேர விரும்பும் பொறியியல் பட்டதாரிகளுக்கு சிறப்பான வாய்ப்பாக, Staff Selection Commission (SSC) சார்பில் 1,748 Junior Engineer பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**முக்கிய விவரங்கள்**

நிறுவனம்: Staff Selection Commission (SSC)
பணி: Junior Engineer (JE)
காலியிடங்கள்: 1,748
பணி வகை: மத்திய அரசு பணி
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பம் தொடக்கம்: 02.09.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 22.09.2026
விண்ணப்ப முறை: ஆன்லைன்
அறிவிப்பு எண்: HQ–C–3019/1/2026–C–3

**முக்கிய அறிவுரை**

தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் கடைசி தேதிக்காக காத்திருக்காமல், செப்டம்பர் 22, 2026–க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: ssc.gov.in

# முதலமைச்சரின் புதிய அலுவலக பணிக்கு தேர்வான பிரபல நிறுவனம்!

சென்னை, செப். 04–

முதலமைச்சரின் அலுவலகம் புதுப்பிப்பதற்கான டெண்டரில் ரூ.3.78 கோடிக்கு ராசி பில்டர்ஸ் நிறுவனம் தேர்வாகியுள்ளது.




முதலமைச்சர் ஜோசப் விஜய்யின் அலுவலகம் நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது தளத்திற்கு மாற உள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்தது.

முதலமைச்சர், முதலமைச்சரின் செயலாளர்கள், ஆலோசகர்களின் அறை 10வது மாடிக்கு மாறுகிறது என்றும், 10வது மாடியில் உள்ள செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறையின் பல்வேறு பிரிவுகள் கலைவாணர் அரங்கிற்கு மாற்றப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது. தற்போதைய பிரதான கட்டிடத்தில் நிலவும் கடுமையான இடப் பற்றாக்குறை காரணமாக இந்த மாறுதல் நடைபெறுகிறது.

ஆனால் அரசியல் வட்டாரத்தில், தற்போதைய அறை வாஸ்துபடி இல்லை என்றும், ஆட்சியில் தொடர்ந்து நீடிக்க உயரமான இடத்தில் அமர வேண்டும் என்ற ஜோதிடரின் ஆலோசனையும் இதற்குக் காரணம் எனப் பரவலாகப் பேசப்பட்டது.

புனித ஜார்ஜ் கோட்டையின் நாமக்கல் கவிஞர் மாளிகையில் முதலமைச்சரின் புதிய அலுவலகம் அமையவுள்ள நிலையில், டெண்டர் தேர்வாகியுள்ளது.

அரசு நிர்ணயித்த மதிப்பீட்டுத் தொகையை விட 32 சதவீதம் குறைவாக ரூ.3.78 கோடிக்கு ராசி பில்டர்ஸ் நிறுவனம் டெண்டர் கோரியுள்ளது.

# சகோதரரை தாக்கிய வழக்கில் தவெக அமைச்சர் மரியவில்சன் புதுச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்!



புதுச்சேரி, செப். 04–

சகோதரரை தாக்கிய வழக்கில் தவெக அமைச்சர் மரியவில்சன் புதுச்சேரி நீதிமன்றத்தில் ஆஜரானார். அமைச்சர் மரியவில்சன் இங்கிலாந்து மன்னரல்ல என ஐகோர்ட் கண்டித்த நிலையில் புதுவை நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். ஆக.31க்குப் பிறகு அமைச்சர் மரியவில்சன் கண்டிப்பாக ஆஜ ராக வேண்டும் என ஐகோர்ட் கண்டித்திருந்த நிலையில் ஆஜரானார்.

# மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் கௌரவ ஆலோசகராக ஓய்வு பெற்ற பேராசிரியர் பழனிதுரை நியமனம்!

சென்னை, செப். 04–



காந்தி கிராமியப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் பழனிதுரை மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் கௌரவ ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நீர்வளத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருக்கும் ஆலோசகராகப் பணியாற்றுவார். ஊரக வளர்ச்சித் துறையில் 20 ஆண்டுகள் அனுபவம் உள்ள அவருக்கு மாத ஊதியம் ரூ. 1 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# நிதி நெருக்கடிக்கு மத்தியில் புதிய தலைமைச் செயலகம் அவசியம் தானா?

சென்னை, செப். 04–

நிதி நெருக்கடிக்கு மத்தியில் புதிய தலைமைச் செயலகம் அவசியம் தானா? என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், அதுகுறித்து விரிவாக இங்கே காண்போம்.



**சட்டசபை கூட்ட அரங்கம்**

105 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட சட்டசபை வரலாற்றில், நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே மெட்ராஸ் மாகாணமாக இருந்த நேரத்தில், 1921–ம் ஆண்டு ஜனவரி 9–ந் தேதி, முதல் முறையாக புனித ஜார்ஜ் கோட்டையில் சட்டசபை கூட்டம் நடந்துள்ளது.

இடையில், செனட் ஹவுஸ் (1937–1938), ராஜாஜி அரங்கம் (1938–1939), கலைவாணர் அரங்கம் (1952–1956), அரன்மோர் அரண்மனை, ஊட்டி (1959 – 10 நாட்கள்), ஓமந்தூரார் அரசினர் தோட்டம் (2010–2011) (தற்போதைய அரசு பன்நோக்கு சிறப்பு மருத்துவமனை கட்டிடம்) ஆகிய இடங்களுக்கு இடம்மாறினாலும், 98 ஆண்டுகளாக தடம் மாறாமல் புனித ஜார்ஜ் கோட்டை அரங்கத்திலேயே சட்டசபை கூட்டம் நடைபெற்று வருகிறது.

**ரூ.1,200 கோடியில் புதிய தலைமைச் செயலகம்**

இந்த நிலையில், சட்டசபையில் நேற்று முதல்–அமைச்சர் ஜோசப் விஜய், புதிய தலைமைச் செயலகம் கட்டுவது குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதாவது, “நவீன வசதிகளுடன் கூடிய சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகம் அடங்கிய புதிய கட்டிட வளாகம் சென்னையில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் ரூ.1,200 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்” என்று அவர் அறிவித்தார்.

புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்காக பட்டினப்பாக்கம் போர் ஷோர் எஸ்டேட், கிண்டி நெருஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகம், கிண்டி ரேஸ்கோர்ஸ், நந்தம்பாக்கம் பகுதியில் உள்ள அரசு இடம் ஆகியவை பரிசீலனையில் இருந்து வருகின்றன.

நிதி நெருக்கடியில் அவசியம் தானா?

இந்த நேரத்தில், ரூ.10 லட்சம் கோடிக்கும் அதிகமாக கடன் இருக்கும் சூழ்நிலையில் புதிய தலைமைச் செயலகம் அவசியம் தானா? என்ற கேள்வி அனைவரது மனதிலும் எழலாம்.

தமிழ்நாட்டில் மக்கள்தொகைக்கு ஏற்ப தொகுதி வரையறை செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தற்போது 2011–ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் 234 சட்டசபை தொகுதிகள் உள்ளன.

**சட்டமன்ற தொகுதிகள் அதிகரிக்கும் நிலை**

15 ஆண்டுகளுக்கு பிறகு, தற்போதுதான் தமிழகத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி நடைபெற இருக்கிறது. மக்கள்தொகை 8 கோடியை கடந்திருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், தமிழகத்தில் சட்டமன்ற தொகுதிகளின் எண்ணிக்கை 120 அதிகரிக்கும் என்று தெரிகிறது. அதாவது, 234 தொகுதிகள், 354 ஆக அதிகரிக்கும் நிலை உள்ளது.

புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள தற்போதைய தமிழக சட்டசபை கூட்ட அரங்கத்தில், 234 சட்டமன்ற உறுப்பினர்களும் நெருக்கடியான நிலையிலேயே அமரவைக்கப்பட்டுள்ளனர். இதுபோக, சபாநாயகர் இருக்கைக்கு வலதுபுறம் அரசு அதிகாரிகள் இருக்கும் இடமும், இடதுபுறம் பத்திரிகையாளர்கள் இருக்கும் இடமும் விசாலமாக இல்லை.

**பிரிந்து கிடக்கும் 55 துறை அலுவலகங்கள்**

எதிர்காலத்தில், சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 354 ஆக உயரும்போது, தற்போதைய கூட்ட அரங்கம் நிச்சயம் போதாது. அந்த நேரத்தில், புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கான தேவை கண்டிப்பாக ஏற்படும்.

எனவே, அப்போதைய தேவையை கருத்தில் கொண்டு, இப்போதே புதிய தலைமைச் செயலகம் கட்டிடம் கட்டுவது என்பது தேவையான ஒன்றுதான். தமிழக அரசின் கீழ் 55 துறைகள் இருக்கின்றன. இதற்கான அலுவலகங்கள், தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை, மெரினா கடற்கரை உழைப்பாளர் சிலைக்கு எதிரே உள்ள எழிலகம் கட்டிடம், சைதாப்பேட்டையில் உள்ள பனகல் மாளிகை ஆகிய இடங்களில் பிரிந்து கிடக்கின்றன. இதனை ஒரே இடத்தில் ஒருங்கிணைப்பது நிர்வாக வசதிக்கு ஏதுவாக இருக்கும்.

**ஓமந்தூரார் அரசினர் தோட்டம்**

ஆனால், 2006–2011–ம் ஆண்டு காலக்கட்டத்தில் ஆட்சி பொறுப்பில் இருந்த தி.மு.க. அரசு, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டிடத்தை கட்டி, சுமார் ஓராண்டு காலம் (2010–2011) அந்த கட்டிடத்திலேயே சட்டசபை கூட்டத்தையும் நடத்தியது.

ஆனால், 2011–ம் ஆண்டு ஆட்சி மாற்றத்தில் வந்த அ.தி.மு.க. அரசு, புதிய தலைமைச் செயலக கட்டிடத்தை, பன்நோக்கு அரசு சிறப்பு மருத்துவமனையாக மாற்றிவிட்டு, மீண்டும் தற்போதைய இடத்திற்கே சட்டசபையை மாற்றியது.

**சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும்**


எனவே, புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு, புதிதாக அமைக்க இருக்கும் தலைமைச் செயலக கட்டிடத்தையாவது அரசியல் காரணங்களுக்காக எதிர்காலத்தில் மாற்றியமைக்காத வகையில், கட்டிய இடத்திலேயே தொடர சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

மற்றொரு பக்கம், கிண்டியில் உள்ள அரசு பன்னோக்கு மருத்துவமனையை மேலும் தரம் உயர்த்தி, ஓமந்தூரார் மருத்துவமனையில் உள்ள டாக்டர்கள், பணியாளர்கள், நோயாளிகளை அங்கு மாற்றிவிட்டு, மீண்டும் அதே கட்டிடத்தை தலைமைச் செயலகமாக மாற்றலாம் என்ற கோரிக்கையும் எழுகிறது.



# சினிமா துளிகள்..!

## சூர்யாவுக்கு ஜோடியாகும் 'டிசி' பட நாயகி!



இயக்குநர் எச்.வினோத் இயக்கத்தில் சூர்யா நடிக்க உள்ளதாகவும், இப்படம் தற்காலிகமாக 'சூர்யா 49' என அழைக்கப்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

'சூர்யா 49' படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக பாலிவுட் நடிகை வாமிகா கபி நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சமீபத்தில் லோகேஷ் கனகராஜ் இயக்கிய 'டிசி' திரைப்படத்தில் தனது நடிப்பால் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்த வாமிகா கபி, சூர்யாவுடன் இணைய இருப்பதாக வெளியாகியுள்ள தகவல் தற்போது பேசுபொருளாகியுள்ளது. எனினும், இந்த கூட்டணி தொடர்பாக படக்குழு தரப்பில் இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

'சூர்யா 49' படத்திற்கு இளம் இசையமைப்பாளர் சாய் அபயங்கர் இசையமைக்க உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே சூர்யா நடிக்கும் 'கருப்பு' படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ள நிலையில், இந்த கூட்டணி மீண்டும் இணைய இருப்பதாக கூறப்படுகிறது. 'ஜன நாயகன்' படத்தைத் தொடர்ந்து எச்.வினோத் இயக்கும் படம் என்பதாலும், சூர்யாவாமிகா கபி கூட்டணி குறித்த தகவலாலும் 'சூர்யா 49' படத்தின் மீதான எதிர்பார்ப்பு தற்போதே அதிகரித்துள்ளது.

## “அரசன்” படம் தரமான சம்பவம் செய்யும்.. சிலம்பரசன்!




சென்னையில் நடைபெற்ற சமீபத்திய கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட நடிகர் சிலம்பரசன், 'அரசன்' திரைப்படம் குறித்த முக்கிய தகவலை பகிர்ந்துள்ளார். அதாவது, “அரசன் திரைப்படம் 2027ஆம் ஆண்டு பொங்கலுக்கு வரும் என்று பலரும் எதிர்பார்த்திருக்கிறார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பொங்கலுக்கு படம் ரிலீஸாகவில்லை. படத்தின் தரத்தில் எந்தவிதமான சமரசமும் செய்ய நாங்கள் விரும்பவில்லை. நீங்கள் அனைவருமே பெருமைப்படும் வகையில் அரசன் படம் தரமான சம்பவத்தை செய்யும். ரசிகர்கள் நீண்ட நாட்களாக காத்திருந்த 'The World of Arasan' படத்துடைய க்ளிம்ப்ஸ் தீபாவளியை முன்னிட்டு திரையரங்குகளில் பிரத்யேகமாக வெளியிடப்படும்” என்று தெரிவித்துள்ளார்.

# ஃபோல்க்ஸ்வேகன்

## 50,000 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய முடிவு!




முன்னணி கார் தயாரிப்பு நிறுவனமான ஃபோல்க்ஸ்வேகன், 50,000 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய முடிவு செய்துள்ளது. மேலும், 2030–ஆம் ஆண்டுக்குள் மொத்தம் 1 லட்சம் ஊழியர்களை குறைக்கவும் திட்டமிட்டுள்ளது.





இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# சபாநாயகர் இருக்கையில் இஸ்லாமியர்; வரலாற்றில் நடந்த அடுத்த நிகழ்வு!

சென்னை, செப். 04–

தமிழக சட்டப்பேரவையில் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், நேற்று முன் தினம் (02–09–26) மீன்வளம், கால்நடை பராமரிப்புத்துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதன் மீதான விவாதம் நடைபெற்றது.



இந்த விவாதக் கூட்டத்தின் போது, திருப்பூர் வடக்குத் தொகுதி எம்.எல்.ஏ சத்தியபாமா சிறிது நேரம் மாற்று பேரவைத் தலைவராக சபாநாயகர் இருக்கையில் அமர்ந்து அவையை வழி நடத்தினார். தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு பெண், மாற்று பேரவைத் தலைவராக சபாநாயகர் இருக்கையில் அமர்ந்து அவையை வழிநடத்தியது இதுவே முதல் முறையாகும். இந்த வரலாற்று சம்பவத்துக்கு திமுக முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பாராட்டு தெரிவித்தார்.

இந்த நிலையில், நேற்று (03–09–26) அடுத்த வரலாற்று சம்பவமாக தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு இஸ்லாமியர் சபாநாயகர் இருக்கையில் அமர்ந்து மாற்று பேரவைத் தலைவராக அவையை நடத்தியுள்ளார். சட்டசபையில் நேற்று காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதன் மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் அவையை நடத்தி வந்த நிலையில், திடீரென மதுரை மத்திய தொகுதி தவெக எம்.எல்.ஏ மதார் பதுருதீன் முஸ்தபா மாற்று பேரவைத் தலைவராக சபாநாயகர் இருக்கையில் அமர்ந்து அவையை வழி நடத்தினார்.

# ஐடிஐ-க்களில் சேர்க்கை: செப். 7 வரை அவகாசம்!

சென்னை, செப். 04–

தொழிற்பயிற்சி நிலையங்களில் (ஐடிஐ) நேரடி மாணவர் சேர்க்கைக்கான கால அவகாசம் செப். 7 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.


இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழகத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் 132 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் 278 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்பயிற்சி நிலையங்களில் 2026–2027–ஆம் ஆண்டு நேரடி சேர்க்கை கால அவகாசம் ஆக. 31–ஆம் தேதியுடன் நிறைவடைந்த நிலையில், மாணவர்களின் நலன் கருதி தொழிற்பயிற்சி நிலையங்களில் நேரடி சேர்க்கைக்கான கால அவகாசம் செப்.7 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.




தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புகள் கிடைக்கிறது. குறைந்தபட்சம் ரூ.20,000 முதல் மாணவர்களின் திறனுக்கேற்றவாறு ரூ.30,000 வரை மாதச் சம்பளம் கிடைக்கிறது.

தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் சென்று தாம் விரும்பும் தொழிற்பிரிவை தெரிவு செய்து தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரலாம். மேலும், 94990 55642, 94990 55612 (வாட்ஸ் ஆப்) ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘தயவு செய்து அரசியல் பேச வேண்டாம்’ - ராமதாஸ் இல்லத்தில் வைக்கப்பட்ட அறிவிப்பு பலகை..!




விழுப்புரம், செப். 04–

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாசின் தைலாபுரம் இல்லத்தில், ‘தயவு செய்து அரசியல் பேச வேண்டாம்’ என அறிவுறுத்தும் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது. தைலாபுரம் இல்ல வளாகத்தின் நுழைவு வாயில் கதவு முன்பு ‘அரசியல் துறவறம்’ என்ற தலைப்பில் இந்த அறிவிப்பு இடம்பெற்றுள்ளது.

# உடைந்தது சிஜேபி! உருவானது சிஜேபி-டி!

புதுடெல்லி, செப். 04–

நாடு முழுவதும் சிஜேபியை பலப்படுத்தும்வகையில் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நிர்வாகக் குழுவை கட்சியின் நிறுவனர் அபிஜீத் தீப்கே கடந்த மாதம் அறிவித்திருந்தார்.

அந்த குழுவில், ஜந்தர் – மந்தர் போராட்டத்தை ஒருங்கிணைத்தவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து, அபிஜீத் தீப்கேவின் வீட்டுக்கு வெளியே மனிஷ் பிரம்மபத், ராகுல் பாண்டியா உள்ளிட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், சிஜேபி கட்சியின் புதிய தேசிய செயற்குழுவானது, ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கேஜரிவாலுடன் இணக்கமாகச் செயல்படும் குழுவாக மாறிவிட்டதாக ஏற்கெனவே மனிஷ் பிரம்மபத் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில், 'கரப்பான் பூச்சி ஜனதா கட்சி – ஜனநாயகம்' என்ற கட்சியைத் தொடங்குவதாக மனிஷ் பிரம்மபத் வியாழக்கிழமை அறிவித்தார்.

இதுதொடர்பாக வீடியோ வெளியிட்ட மனிஷ் பிரம்மபத், “இளைஞர்களின் துணிச்சலால் முன்னெடுக்கப்பட்டு வெற்றிபெற்ற நாடு தழுவிய இயக்கத்தை அரவிந்த் கேஜரிவால் தன்வசப்படுத்த முயற்சிக்கிறார். அவரின் அரசியல் நோக்கங்களுக்கு ஏற்ப செயல்பட அபிஜீத் தீப்கேவுடன் ஒப்பந்தம் செய்துள்ளார்.

இதன் விளைவாக சிஜேபி நிர்வாகக் குழுவில் ஆம் ஆத்மி கட்சியினருக்கு மட்டுமே இடம் அளிக்கப்பட்டது. ஒரு மாணவர்கூட சேர்க்கப்படவில்லை. ஏற்கெனவே இருந்த ஒரு பெண்ணைத் தவிர வேறெந்த பெண்ணுக்கு இடமளிக்கவில்லை. இஸ்லாமிய ஆண்கள், சீக்கியர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. கேஜரிவால் குழுவான உருவெடுத்துள்ளார்கள்.

எல்லா இடங்களுக்கும் சென்ற சிஜேபி நிர்வாகிகள், ஜார்க்கண்ட் போராட்டத்துக்கு மட்டும் செல்லவில்லை. ஏனெனில், பாஜகவின் எதிர்க்கட்சிகள்



ஆளும் மாநிலம் என்பதால், அரசியல் பேரம் நடத்த திட்டமிட்டிருந்த கேஜரிவால் அவர்களை தடுத்துவிட்டார்” என்று குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மேலும், தனது இயக்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படும் என உறுதியளித்த மனிஷ் பிரம்மபத், வாட்ஸ் ஆப் குழு, இணையதளம் மற்றும் மிஸ்ட் கால் கொடுத்து சிஜேபி–டி கட்சியில் இணையலாம் எனத் தெரிவித்துள்ளார். சமூக ஆர்வலரான மனிஷ் பிரம்மபத், குஜராத் சட்டப்பேரவைத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்டு தோல்வி அடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீநகரில் தரையிறங்கிய இண்டிகோ விமானம் கம்பத்தில் மோதி விபத்து!

ஸ்ரீநகர், செப். 04–

ஸ்ரீநகர் விமான நிலையத்தில் தரையிறங்கிய இண்டிகோ விமானம், அங்குள்ள கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது. அதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இது தொடர்பாக அதிகாரிகள் கூறியதாவது; நவி மும்பையிலி ருந்து ஸ்ரீநகர் வந்த இண்டிகோ விமானம் , ஜம்மு காஷ்மீரின் ஸ்ரீநகர் சர்வதேச விமான நிலை யத்தில் தரைமிறங்கியது. அப்போது, விமான நிறுத்துமிடம் எண் 06ல் விமா னம் நிறுத்தப்படும்போது, அங்குள்ள கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்கின்றனர். யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. மேலும், விபத்துக்கான காரணம் குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விமான நிலையத்தின் செயல்பாடுகள் வழக்கம் போல் தொடர்ந்து நடந்து வருகிறது,

கடந்த 24 மணி நேரத்தில் இண்டிகோ விமானம் சம்பந்தப்பட்ட இரண்டாவது சம்பவம் இதுவாகும். முன்னதாக, தோஹாவிலிருந்து பெங்களூரு நோக்கிச் சென்ற இண்டிகோ விமானம் விமானி ஒருவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் மஸ்கட்டுக்குத் திசைதிருப்பப்பட்டு தரையிறக்கப்பட்டது.

# நியாய விலைக் கடைகளில் ரூ.35க்கு வெங்காயம்! ஆனாலும் கண்ணீரில் நடுத்தர குடும்பங்கள்!! ஏன்?

சென்னை, செப். 04–

தமிழ்நாட்டில், வெங்காய வரத்து குறைந்ததால் ஒரு கிலோ வெங்காயம் ரூ.65 வரை விற்பனையாகி, தற்போது ரூ.60 ஆகக் குறைந்துள்ளது. சாம்பார் முதல்பருப்புவரை அனைத்துக்கும் வெங்காயம் தேவை என்ற நிலையில், அதனை தவிர்க்கவும் முடியாமல், தேவையான அளவுக்கு வாங்கவும் முடியாமல் தவிக்கின்றன நடுத்தர குடும்பங்கள்.



இந்த நிலையில்தான், 1000 டன் வெங்காயத்தை இறக்குமதி செய்திருக்கும் தமிழக அரசு, தமிழ்நாட்டில் உள்ள 8,739 நியாய விலைக் கடைகளில் கிலோ ரூ.35க்கு விற்பனை செய்ய முன் வந்துள்ளது.

காய்கறிகள் விளையும் மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களின் ஆனாலும் நடுத்தர மக்களின் கண்ணீரைத் துடைக்க முடியவில்லை. காரணம் பல்வேறு காரணங்களால் பல காய்கறிகளின் விலைகள் விண்ணை முட்டுகின்றன.

பீன்ஸ், கேரட் விலை ஒரு கிலோ ரூ.60 ஆக இருந்த நிலையில் இன்று ரூ.70 – ரூ.80 வரை விற்பனையாகிறது. அவரைக்காய் விலை ரூ.50 ஆக உயர்ந்துள்ளது. பீட்ரூட் ரூ.35 ஆக இருந்த நிலையில் தற்போது ரூ.40 ஆகவும், தக்காளி ரூ.25லிருந்து ரூ.30 ஆக உயர்ந்திருக்கின்றன.

பல காய்கறிகளின் விலைகள் ரூ.5 முதல் ரூ.10 வரை உயர்ந்திருப்பதால் பொதுவாக ஒரு நாளைக்கு வாங்கும் காய்கறிகளின் விலைகளில் இது கிட்டத்தட்ட ரூ.25 முதல் 35 வரை உயர்வை ஏற்படுத்தியிருக்கிறது. இது ஒரு வாரத்துக்கான வீட்டுச் செலவை அதிகரித்து அன்றாடக் கூலித் தொழிலாளர்களுக்கு பெரும் இன்னலை ஏற்படுத்துகிறது.

நியாய விலைக் கடைகளில் வெங்காயம் விற்பனை செய்யப்பட்டாலும் அது சிறு குடும்பங்களுக்கு வேண்டுமானால் பயன்படும். ஆனால் பெரிய குடும்பங்களுக்கு ஒரு கிலோ வெங்காயம் என்பது ஓரிரு நாள்களுக்கு மட்டுமே போதுமானது. ஆனால், நியாய விலைக் கடைகளில் வெங்காயம் விற்பனைக்கு வருவதால், வெளிச் சந்தைகளில் அதிகரிக்க வேண்டிய வெங்காய விலை சற்று குறைந்திருக்கிறது. இது ஒன்று மட்டுமே மக்களுக்கு ஆனந்தக் கண்ணீரை ஏற்படுத்தியிருக்கிறது.

# ஆபரேஷன் தலாஷ்: காணாமல் போன 3,357 குழந்தைகள் மீட்பு - அதிரடி காட்டிய பீகார் காவல்துறை!

பீகார், செப். 04–

பீகார் சிஐடி பிரிவின் கூடுதல் தலைமை இயக்குநர் கே. சுஹிதா அனுபமின் வழிகாட்டுதலின் ஆகஸ்ட் 20 தொடங்கிய இந்த ஆபரேஷன் செப்டம்பர் 10 வரை நடைபெறுகிறது. இந்தத் தேடுதல் வேட்டையில் சிறார்களுக்கான சிறப்பு சிறப்பு காவல் பிரிவினர், பெண்கள் மற்றும் குழந்தைகள் நல உதவி மையங்கள், மனித கடத்தல் தடுப்புப் பிரிவுகள், மற்றும் ‘போலீஸ் தீதி’, ‘அபயா பிரிகேட்’ போன்ற பெண் காவலர்களின் சிறப்பு படைகள் ஒருங்கிணைந்து இந்த ஆபரேஷனை மேற்கொள்கின்றன.

ஆகஸ்ட் 20 முதல் செப்டம்பர் 2 வரை மொத்தம் 14 நாட்களில் மட்டும் மொத்தம் 3,359 குழந்தைகள் கண்டறியப்பட்டு, அவர்களில் 3,357 குழந்தைகள் வெற்றிகரமாக மீட்கப்பட்டுள்ளதாக பீகார் காவல்துறை தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்டவர்களில் 2,705 பேர் சிறுமிகள் மற்றும் 652 பேர் சிறுவர்கள் ஆவர். பெண் குழந்தைகளின் எண்ணிக்கை இதில் மிக அதிகமாக உள்ளது கவனிக்கத்தக்கது. 14 நாட்களில் ‘மிஷன் வாத்சல்யா’ என்ற இணையதளத்தில் புதிதாக 2,254 குழந்தைகளின் விவரங்கள் பதிவேற்றப்பட்டன. அதில் ஏற்கனவே இருந்த பதிவுகளுடன் ஒப்பிட்டு 2,787 குழந்தைகளின் விவரங்கள் துல்லியமாகப் பொருத்தப்பட்டு அடையாளம் காணப்பட்டன.

பீகார் காவல்துறையின் அறிக்கையின்படி, ‘மிஷன் வாத்சல்யா’ இணையதளம் தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை மொத்தம் 6,857 குழந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த ஆபரேஷன் வெறும் காவல் நிலையப் பதிவுகளுடன் மட்டும் நின்றுவிடாமல், சிறுவர் நீதி வாரியங்களின் அனுமதியுடன் குழந்தைகள் காப்பகங்கள், சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் சிறார் இல்லங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள குழந்தைகளுடன் அதிகாரிகள் கலந்துரையாடி, அவர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் வழங்கி, அவர்களின் குடும்பப் பின்னணியைக் கண்டறிந்து வருகின்றனர்.

மேலும், குழந்தை திருமணங்கள் தொடர்பாக நிலுவையில் உள்ள கடத்தல் வழக்குகளையும் காவல்துறையினர் இந்த ஆபரேஷனின் கீழ் தீவிரமாக மறுவிசாரணை செய்து வருகின்றனர்.

# கனடா நாட்டின் ஒன்டாரியோ அரசு சட்டமன்றத்தின் சார்பாக வழக்கறிஞர் டாக்டர் ராம் சங்கர் ராஜாவுக்கு பாராட்டு!

தில்லி தமிழ் வழக்கறிஞர்கள் சங்கத்தின் செயலாளரும் உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞருமான ராம் சங்கர் ராஜா அவர்களை சட்ட மன்றதிற்கு வரவேற்று அந்த மாகானத்தின் பாராளுமன்ற உறுப்பினர் திரு லோகன் கனபதி, MPP மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்து கௌரவித்து உள்ளார்.

அரசின் பாராட்டு சான்றில் ராம் சங்கர் ராஜா இந்திய உச்ச நீதிமன்ற வழக்கறிஞராகவும், தில்லி தமிழ் வழக்கறிஞர்கள் சங்கத்தின் செயலாளராகவும் அவர் ஆற்றி வரும் சிறப்பான சேவைக்காக இந்த பாராட்டு கனடா நாட்டின் ஒன்டாரியோ மாகாணத்தின் சார்பில் வழங்க படுவதாக தெரிவித்து உள்ளார்.

சட்டத் துறையில் ராம் சங்கர் அவர்களின் அர்ப்பணிப்பு, நீதிக்கான அவரின் உறுதிப்பாடு, மற்றும் தமிழ்




சமூகத்திற்கு சேவை செய்வதில் அவர் காட்டும் அயராத முயற்சிகள் ஆழமாக பாராட்டப்படுவதாக கூறியுள்ளார்.

அவரின் தலைமைத்துவம் சட்டம் மற்றும் சமூக பிணைப்புகளை வலுப்படுத்தி வருவாதாகவும் அவரின் தொடர்ச்சியான வெற்றிக்கும் சேவைக்கும் தனது மனமார்ந்த நன்றியையும், நல்வாழ்த்துக்களையும் அரசின் தெரிவித்துக் கொள்கொள்வதாக கூறி உள்ளார்.

ராம் சங்கர் ராஜ தனது கனடா பயணத்தின் போது கனடிய தமிழ் சங்கம், உலக தமிழ் ஆய்வு மாநாடு, உலக தமிழ் ஆசிரியர் மாநாடு, படிமுறை தமிழ் ஒன்றியம் போன்ற பல்வேறு தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

தமிழர் வாழும் நாடுகளில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு தேவையான பங்களிப்பை தில்லி தமிழ் வழக்கறிஞர்கள் சங்கம் என்றும் தரும் என்றும் அடுத்த தலை முறையினர் தமிழ் மொழியில் சிறந்து தமிழ் தொண்டு ஆற்றும் தமிழர்களை ஊக்குவிக்கும் விதமாக அவர்களை நாடுதோறும் சென்று நேரில் வாழ்த்தி வருகிறார்.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020